




தி.மு.கழகத்தின் இதயமாம் இளைஞரணியின் 2ஆவது மாநில மாநாடு சேலத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி எழுச்சியோடு நடைபெறவுள்ளது. கழக வரலாற்றில் புதிய மைல்கல்லாக அமையப்போகிற இம்மாநாட்டிற்கு, இளைஞரணி நிர்வாகிகளை தயார்படுத்துகிற விதமாக தேனி தெற்கு – வடக்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேர்தல் பணி செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் ஜெயக்குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தொகுதி தோறும் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகரத்தில் கழக இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச் செல்வன்ஆகியோர் உள்ளனர்.

### சிவகங்கையில் ராணி வேலுநாச்சியாரின்

# படைத்தளபதி குயிலியின் நினைவு நாள்!

## துரைஆனந்த் தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை!

சிவகங்கை, அக். 27-

சிவகங்கையை ஆட்சி புரிந்தவர் ராணி வேலுநாச்சியார்.இவர் நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடியவர். ஆங்கிலேயர்கள் சிவகங்கையை கைப்பற்று வதற்காக படைகளுடன் வருவதாக தகவல் கிடைத்ததும் தளபதியாக பணியாற்றிய பெண் வீரர் குயிலி உடம்பில் எண்ணெயை ஊற்றிய வாறு தீவைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்கில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார். இவரது செயலை போற்றும் வகையில் சிவகங்கையில் ராணி வேலுநாச்சியார் நினைவு மண்டபத்தில் குயிலியின் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

அவரது நினைவு நாள் அக்.24ம் தேதி அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு குயிலியின் நினைவிடத்தில் சிவகங்கை நகரக் கழகச் செயலாளரும் நகர் மன்றத் தலைவருமான சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலப் பிரிவு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்க முத்து, மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், கவுன்சிலர்கள் ஜெயகாந்தன், அயூப்கான், வீரகாளை, ராம்தாஸ், காந்தி,கார்த்திகேயன், இலக்கிய அணி ரமேஸ், இளைஞரணி அரிஹரன், பிரபாகரன் கருணாநிதி மற்றும் நிர்வாகிகள் மலர் ர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

பல்வேறு சமுதாய அமைப்பினரும் குயிலியின் நினைவிடத்தில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா டி. குலசேகரன்**
**அக்டோபர் 27 (2001)**



காஞ்சிபுரம் மாவட்டம், வாலாசாபாத் ஒன்றியம், பரந்தூர் ஒன்றியத்தில் கிளைச் செயலாளர், ஒன்றிய பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, தலைமை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

பஞ்சாயத்து தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை பணி நிலையம் தலைவர் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளில் ஈடுபட்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர். இது தவிர கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் கவனத்திற்கு!

### ஆதிதிராவிடர் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, அக்.27-

தமிழ்நாட்டில் பட்டியல்இன மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள்.

பட்டியல்இனமக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றி வரும்அரியதொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2023 ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் தங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

www.tn.gov.in/ta/forms/Deptname/1என்ற இணைய தளத்திலிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆதி திராவிடர் நல இயக்குநர் அலுவலகம் சென்னை அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என ஆதி திராவிடர் நலத்துறை தெரிவித்துள்ளது.


**நினைவை விட்டு நீங்கா எங்கள் நெஞ்சத்திற்கு**

**11-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம் 05.09.1939



நினைவு 27.10.2012

**A.L.சுப்பிரமணியன்**
B.Sc.,B.L.,Ex. M.L.A,Ex.Mayor

**தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்**

செயலர், திருநெல்வேலி கல்வி சங்கம் ம.தி.தா.இந்துக்கல்லூரி மற்றும் மேல்நிலைப்பள்ளி
E.X.தலைவர் திருநெல்வேலி வழக்கறிஞர் சங்கம்.

**A.L.S.லெட்சுமணன் A.L.S.சண்முகம்**
தலைமை செயற்குழு உறுப்பினர்,
முன்னாள் மாநகர செயலாளர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி.